கொடுக்கப்பட்டு வருகிறது. அதையும் தவிர பஞ்சாப் நேஷனல் பாங்க் மூலம் 120 குடும்பங்களுக்கு ரூபாய் 5 லட்சத்து 90 ஆயிரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதுவும் தவிர 68 குடும்பங்களுக்கு ரீப்பேட்ரியேட்ஸ் பாங்க் காரண்டி கொடுத்தது, அவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை குடும்பங்கள் அந்த வீடு கட்டும் திட்டத்தால் பயன்பெற்று இருக்கிறார்கள்? எத்தனை பேர் இது வரையில் குடியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, 3,132 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

மதுரை ராஜா மில் மின்சார கட்டண நிலுவை

***வினா எண் 864—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ராஜா மில் நிர்வாகம் ரூபாய் 88 ஆயிரத்திற்குமேல் மின்சாரக் கட்டணம் பாக்கி கட்ட வேண்டியுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இந்தப் பணத்தை உடனடியாக வசூலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மில் ஓடாத காலத்திற்கான மாதாந்திரக் குறைந்த அளவுக் கட்டணமான ரூபாய் 32,858.95 நிலுவையில் உள்ளது.

(ஆ) மின்சார வாரியம் உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அமைச்சர் அவர்கள் பாக்கி இருப்பதாகச் சொன்னார்கள். அது மில் ஓடாத காலத்திற்கு என்று சொன்னார்கள். அதை வசூலிப்பதற்கு மின்சார வாரியம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? அந்த மேனேஜ்மென்ட் ரொம்ப நொடிந்து போய் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தப் பணத்திற்கு ஆபத்து வர இருப்பதால் உடனடியாக அரசு வசூலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மில் ஓடாத 4½ ஆண்டுக் காலத்திற்கும் புதிய ஒப்பந்தம் சேர்த்து எழுதித் தருவதாகப் புதிய சொந்தக்காரர்கள் ஒப்புக் கொண்டதன் பேரில் மேற்படி தொகையை தள்ளுபடி செய்ய மின்சார வாரியம் உத்தேசித்துள்ளது. அதற்கான விவரங்கள் மதுரை மேற்பார்வையாளரிடம் இருந்து பெறப்பட்டு, மின் வாரியத்தின் பரிசீலனையில் தற்போது உள்ளது.

1979 ஏப்ரல் 28]

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பாக்கிகளை மின்சார வாரியத்திற்கு வசூலிப்பதற்காக அண்மையில் ரெவின்யூ ரெகவரி ஆக்ட் நிறைவேற்றப்பட்டதே, அந்தச் சட்டப்படி வசூலிக்க ஏற்பாடு உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது ஆன்னியுவல் மினிமம் சார்ஜஸ். ஓடாத நேரத்தில், மூடியிருந்த காலத்தில் விதிக்கக் கூடிய அந்த ஆன்னியுவல் மினிமம், அந்த மில்லை இப்போது புதியவர்கள் வாங்கியிருக்கிறார்கள்—சாதாரணமாக தொழிற்சாலைக்கு 10 ஆண்டுகள் என்று இருக்கும். அதில் 4 ஆண்டுகள் ஓட்டிவிட்டு, 4 ஆண்டுகள் ஓடாமல் இருந்தால், அந்த ஓடாத 4 ஆண்டுகளுக்கு மேலும் நீடிக்க காரண்டி தருவார்கள் என்றால் அதை ஏற்றுக்கொள்வது வழக்கம்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குச் சலுகை அளிப்பதில் சங்கடம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சொன்னார்கள். இப்படிப்பட்ட பெரிய கம்பெனிகள் 80 ஆயிரம் ரூபாய், 1 லட்ச ரூபாய் என்று பாக்கிகளை ஏற்றிக் கொண்டே இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் முறையில் இன்று சட்டத்தில் இடம் இல்லை என்றாலும், அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசும் அமைச்சரும் ஆலோசனை செய்வார்களா?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது மின்சாரம் பயன்படுத்தியதற்கான கட்டணம் அல்ல. மின்சாரம் பயன்படுத்துவேன் என்ற உறுதி எழுதிக் கொடுத்ததற்கான கட்டணம். ஆகையால் மின்சாரத்தை பயன்படுத்திவிட்டு கட்டணம் செலுத்தவில்லை, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இதில் எழாது. இந்த நிர்வாகம் சரியாக இயங்காத காரணத்தினாலும் நிர்வாகம் மாறிக்கொண்டேயிருந்ததாலும் தடைப்பட்டிருந்தது. ஆகவே அது மீண்டும் இயங்குவதற்கு உரிய சலுகைகளை அரசாங்கமோ அல்லது மின்வாரியமோதான் செய்ய வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது ஓட்டிக் கொண்டிருந்தால் ஏற்படக்கூடிய ஓர் ஆண்டு குறைந்த அளவு கட்டணத்தை வருகிற ஆண்டுகளிலே செலுத்திவிடுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதைத்தான் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். தவிர விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டண விகிதம் மிக மிகக் குறைவு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.